

BUDGET
2023





சிங்கப்பூர் பொருளியல் 2030

# துடிப்புமிக்கப் பொருளியலை உருவாக்குவோம், தொழில்நிறுவன வளர்ச்சிக்குத் துணைபுரிவோம்



> தொழில்களுக்கு 2023 பெரும்பாலும் எளிய ஆண்டாக இருக்கப் போவதில்லை. அரசாங்கம் தேவையான ஆதரவை வழங்கத் தயங்காது. ஆனால், வருங்காலத்திற்கான நீண்டகாலக் கண்ணோட்டத்தை நாம் இழந்துவிடக்கூடாது.
>
> சிங்கப்பூர் பொருளியல் 2030 தொலைநோக்கை அடைவதற்குக் கடின உழைப்பும், சில சூழ்நிலைகளில் தியாகங்களும் தேவைப்படும். நிறுவனங்களும் ஊழியர்களும் உருமாற்றத்திற்குத் தயாராக இருக்கவேண்டும். அதிகரித்துவரும் செலவினங்கள், வளத் தட்டுப்பாடுகள், அதிக சவால்மிக்க அனைத்துலகச் சூழல் ஆகியவற்றுக்கு மத்தியில், நீண்டகால வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் இட்டுச்செல்லக்கூடிய ஒரே பாதை இதுதான்.

– வர்த்தக, தொழில் அமைச்சர் திரு கான் கிம் யோங்

## உள்ளே




ஒன்றிணைந்து முன்னோக்கிச் செல்வோம்: சிங்கப்பூர் பொருளியல் 2030
பக்கங்கள் 3, 4 & 5



தொழில்களுக்குக் குறுகியகால ஆதரவு
பக்கங்கள் 6 & 7



பொருளியல் போட்டித்தன்மையை வலுப்படுத்துதல்
பக்கங்கள் 8 & 9



தொழில்நிறுவனங்களை மேம்படுத்துதல்
பக்கங்கள் 10 & 11



வளத் தட்டுப்பாடுகளுக்குத் தீர்வு கண்டறிதல்
பக்கங்கள் 12 & 13



பங்காளித்துவங்களை ஆழப்படுத்துதல்
பக்கங்கள் 14 & 15

உதவி மற்றும் புத்தாக்க நிலையங்கள்
பக்கம் 16


BUDGET 2023

# பொருளியல் 2030



# ஒன்றிணைந்து முன்னோக்கிச் செல்வோம்

நமது தொழில்நிறுவனங்களுக்கும் மக்களுக்கும் விறுவிறுப்பான வாய்ப்புகளை வழங்கும் துடிப்புமிக்கப் பொருளியலை அடைவதற்கான பாதையை வகுப்பதற்காக **சிங்கப்பூர் பொருளியல் 2030** தொலைநோக்கு 2022ல் அறிமுகமானது.

இதுவரை அடைந்திருக்கும் முன்னேற்றத்தோடு, இந்த ஆண்டு எங்களது திட்டங்களையும் முனைப்புகளையும் நாங்கள் மேம்படுத்துவோம். குறிப்பாக, அனைத்துலகப் பொருளியல் சவால்களுக்கும் அதிகரித்துவரும் வளத் தட்டுப்பாடுகளுக்கும் மத்தியில், தொழில்நிறுவனங்கள் வளர்ச்சிப் பாதையில் தங்களை நிலைநிறுத்திக்கொள்ள இது உதவியாக இருக்கும்.


## உற்பத்தி 2030

**இது என்ன?** அதிநுட்ப உற்பத்திக்கான அனைத்துலகத் தொழில் புத்தாக்க, திறனாளர் மையமாக சிங்கப்பூரை உருவாக்குவது நமது இலக்கு. நமது உற்பத்தித் துறையின் மதிப்பை 2020ல் இருந்து 2030க்குள் 50% உயர்த்துவதற்காக 2021ல் உற்பத்தி 2030 திட்டத்தைத் தொடங்கி வைத்தோம்.

இத்திட்டத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்திருக்கிறோம். 2022ல், நமது உற்பத்தித்திறனின் மதிப்பு 2020ஆம் ஆண்டைவிட 15% அதிகரித்தது. அதோடு, இந்தத் துறைக்கு மொத்த நிலைச்சொத்து முதலீடாக, சாதனை அளவில் $17 பில்லியன் கிடைத்தது. இந்த முதலீட்டுடன், அடுத்த ஐந்து ஆண்டுகளில் 4,600க்கும் மேற்பட்ட வேலைகள் உருவாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**இந்த இலக்கை அடைவதற்காக நாங்கள்:**

- எங்களது ஊக்குவிப்புத் திட்டங்களின் வாயிலாக சிங்கப்பூருக்குள் எல்லை முதலீடுகளை ஈர்ப்போம். **முன்னோடிச் சான்றிதழ், மேம்பாடு மற்றும் விரிவாக்க ஊக்குவிப்புத் திட்டம், முதலீட்டு செலவுத்தொகை வரிச் சலுகைகள்** போன்றவை இதில் உள்ளடங்கும்
- **உற்பத்தி 2030 வாழ்க்கைத்தொழில் திட்டம்** போன்ற முனைப்புகளின் மூலம் திறனாளர்களை ஈர்க்கவும் உள்ளூர் மக்களுக்காக நல்ல வாழ்க்கைத்தொழில் பாதைகளை உருவாக்கவும் நிறுவனங்களுக்கு ஆதரவளிப்போம்
- உயிரியல் தொழில்நுட்பம், எந்திரனியல் போன்ற துறைகளில் புதிதாக உருவாகும் வாய்ப்புகளைத் தேடிச்செல்வோம்



## சேவைகள் 2030

**இது என்ன?** சேவைத் துறையை மேம்படுத்த, நாங்கள் நீடித்த நிலைத்தன்மையிலும் மின்னிலக்கமயமாக்கத்திலும் உள்ள வளர்ச்சி வாய்ப்புகளைப் பயன்படுத்துவோம். இதன்வழி, சிங்கப்பூரைத் துடிப்புமிக்க முன்னணித் தொழில்நிறுவன, வாழ்க்கைபாணி, பயணத்துறை மையமாக நிலைநிறுத்துவோம்.

குறிப்பாக, இந்தப் பத்தாண்டுகளில் நவீனச் சேவைகள் துறையின் மதிப்பைக் குறைந்தது 50% உயர்த்தி, மேலும் 100,000க்கும் மேற்பட்ட வேலைகளை உருவாக்கக் குறி வைத்திருக்கிறோம்.

**இந்த இலக்கை அடைவதற்காக நாங்கள்:**

- மின்னிலக்கமயமாக்கத்திலும் நீடித்த நிலைத்தன்மையிலும் வளர்ச்சி வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ளும் அதே வேளையில், சிங்கப்பூரை நிறுவன மையமாகவும், செயல்பாட்டு மையமாகவும், திறனாளர் மையமாகவும் வலுப்படுத்துவோம்
  - பன்னாட்டுத் தொழில்நிறுவனங்களும் பெரிய உள்ளூர் தொழில்நிறுவனங்களும் தங்களது அனைத்துலக-ஆசியத் தொழில் நடவடிக்கைகளின் தளமாக சிங்கப்பூரைப் பயன்படுத்திக்கொண்டு வளர்ச்சியடைய துணை புரிவோம்
  - தென்கிழக்கு ஆசியாவின் நுழைவாயிலாக நம்மை நிலைநிறுத்திக்கொண்டு, சிங்கப்பூரை உலகுடன் மேலும் நெருக்கமாக இணைப்போம். **நமது மின்னிலக்கப் பொருளியல், பசுமைப் பொருளியல் ஒப்பந்தங்களின்** கட்டமைப்புகளை விரிவுபடுத்துவதும் இதில் உள்ளடங்கும்
  - தென் தீவுகளில் **“இனிய” அனுபவங்களை** வழங்கியும், **அனைத்துலக நீடித்த நிலைத்தன்மை பயணத்துறை மன்றத்தின் பயணத்தளமாக (GSTC-D)** சான்றுபெற்றும், துடிப்புமிக்க வாழ்க்கைபாணி மையமாக சிங்கப்பூரின் நிலையை வலுப்படுத்துவோம்
  - வலுவான, சூழ்நிலைக்கேற்ப மாறக்கூடிய, ஆசியாவுக்குத் தயாரான உள்ளூர் ஊழியர் அணியை உருவாக்குவோம். அதே சமயத்தில், புதிய யோசனைகள், கண்ணோட்டங்கள், வல்லமைகளைக் கொண்டு வரக்கூடிய உலகத் திறனாளர்களின் மையமாகவும் தொடர்ந்து திகழ்வோம்
  - புதுப்பிக்கப்பட்ட நிபுணத்துவச் சேவைகள் தொழில்துறை உருமாற்றத் திட்டத்தைத் தொடங்கி வைப்போம்

## வர்த்தகம் 2030

**இது என்ன?** சிங்கப்பூரின் வர்த்தக அளவைப் பெருக்கி, வர்த்தக நடவடிக்கைகளின் வகைகளை அதிகரித்து, மற்ற உலக நாடுகளுடன் வர்த்தகத்தை விரிவுபடுத்துவது எங்கள் உத்தி. உலக விநியோகத் தொடர்களில் சிங்கப்பூரை ஆழமாகப் பதிப்பதற்கும், உலக வர்த்தக மையம் என்ற நமது தகுதியை மேம்படுத்துவதற்கும் இது துணைபுரியும்.

**இந்த இலக்கை அடைவதற்காக நாங்கள்:**

- சிங்கப்பூரில் தொழில் நடவடிக்கைகளை வேரூன்றி, உள்ளூர் தொழில்நிறுவனங்களுடன் செயல்படக்கூடிய **அனைத்துலக வர்த்தகர்களைப்** பல்வேறு சந்தைகளிலிருந்து ஈர்ப்போம்
- **27 தடையற்ற வர்த்தக உடன்பாடுகள்** உள்ளடங்கிய நமது கட்டமைப்பைச் சாதகமாக்கிக்கொள்ளும் அதே வேளையில், புதிய வர்த்தகத் தொடர்புகளை உருவாக்குவோம்
- வர்த்தக மீள்திறனை வளர்க்கவும், **நீடித்த நிலைத்தன்மை சார்ந்த வர்த்தகத் தயாரிப்புகள்** போன்றவற்றிலிருந்து கிடைக்கும் வளர்ச்சி வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளவும், வர்த்தக செயல்பாடுகளைப் பன்மயமாக்குவோம்

## தொழில்நிறுவனம் 2030

**இது என்ன?** எதிர்கால வளர்ச்சித் திட்டங்களும், அனைத்துலக அரங்கில் போட்டியிடுவதற்குத் தேவையான ஆழ்ந்த திறன்களும் கொண்டிருக்கும் துடிப்பான சிங்கப்பூர் தொழில்நிறுவனங்களின் கூட்டமைப்பை உருவாக்கி, நிலைநாட்டும் எங்கள் உத்தியை இது உள்ளடக்குகிறது.

**இந்த இலக்கை அடைவதற்காக நாங்கள்:**

- உலகின் ஆகச்சிறந்த நிறுவனங்களுடன் போட்டியிடக்கூடிய உயர் வளர்ச்சித்திறன் கொண்ட உள்ளூர் நிறுவனங்களை உருவாக்க ஆதரவளிப்போம். **ஸ்கேல்-அப் எக்ஸ் திட்டம்** போன்ற திட்டங்களைப் பயன்படுத்தும் **சிங்கப்பூர் அனைத்துலக தொழில்நிறுவனங்கள் முனைப்பின்** வாயிலாக இதை நாங்கள் செய்வோம்
- நான்கு **முக்கிய அம்சங்களில் உள்ளூர் தொழில்நிறுவனங்களின் மூல ஆற்றல்களை** வலுப்படுத்துவோம்: நீடித்த நிலைத்தன்மை, அனைத்துலகமயமாக்கம், மின்னிலக்கமயமாக்கம், புத்தாக்கம்



BUDGET 2023

# தொழில்களுக்குக் குறுகியகால ஆதரவு



### இது ஏன் முக்கியம்?

நெருக்கடிமிகுந்த நிதிச் சந்தை சூழலுக்கும் அதிகப்படியான எரிசக்தி விலைகளுக்கும் மத்தியில், அனைத்துலக வளர்ச்சி மிதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தச் சவால்களைத் தொழில்கள் சமாளிப்பதற்கு உதவியாக, குறுகியகாலத் திட்டங்களுடன் நாங்கள் தொடர்ந்து ஆதரவளிப்போம்.

## நிதி வசதி

- நிறுவனங்களுக்குக் கடன் வசதி கிடைப்பதற்கு உதவிபுரிய, தொழில்நிறுவன நிதி ஆதரவுத் திட்ட (EFS) மேம்பாடுகள் 2024 மார்ச் வரை நீட்டிக்கப்படுகின்றன. பின்வருபவை அதில் உள்ளடங்கும்:
  - உயர் நடைமுறை மூலதனத் தேவைகளையும் ரொக்கப் புழக்கத் தேவைகளையும் தொழில்நிறுவனங்கள் சமாளிப்பதற்கு உதவியாக, EFS-சிறிய, நடுத்தர நிறுவனங்களுக்கான நடைமுறை மூலதனக் கடனுக்கு $500,000 வரையிலும், EFS-வர்த்தகக் கடன் $10 மில்லியன் வரையிலும் மேம்படுத்தப்பட்ட தற்போது நடப்பிலுள்ள அதிகபட்ச தொகை வரையறைகள்
  - கட்டுமான நிறுவனங்கள் கைவசமுள்ள திட்டப்பணிகளை நிறைவேற்றவும் புதிய திட்டப்பணிகளைப் பெறவும் துணை புரிவதற்கு, EFS-திட்டப்பணி கடன் திட்டத்தின்கீழ் உள்நாட்டுக் கட்டுமானத் திட்டப்பணிகளுக்கு ஆதரவு வழங்கப்படும் காலகட்டம்
- மீட்கக்கூடிய மாற்றத்தக்க முன்னுரிமை பங்குகளின் (RCPS) ஆதரவுபெற்ற புதுத்தொழில் கடன்களை EFS-புதுத்தொழில் கடனீட்டுத் திட்டத்தில் உள்ளடக்கும் வகையில் திட்டம் மேம்படுத்தப்பட்டுள்ளது



## எரிசக்தி செயலாற்றல்

- உணவுச் சேவைகள், உணவு உற்பத்தி, சில்லறை விற்பனை துறைகளில் உள்ள தொழில்கள், எரிசக்தி செயலாற்றல்மிக்கச் சாதனங்களில் முதலீடு செய்வதற்கும் உயர் மின்சார விலைகளைச் சமாளிப்பதற்கும் 70% வரை ஆதரவு வழங்குவதற்காக, 2024 மார்ச் வரை எரிசக்தி செயலாற்றல் மானியம் நீட்டிக்கப்பட்டுள்ளது



எர்னஸ்ட் அண்ட் யங் சொலுஷன்ஸ் நிறுவனத்தின் ஆசியான் தொழில் ஊக்குவிப்பு ஆலோசனைத் தலைவர் டான் பின் எங்:

**“ரொக்கப் புழக்கமே சிறிய, நடுத்தர நிறுவனங்களின் உயிர்நாடி. அவர்களுக்கு நிதி வசதி கிடைப்பது அத்தியாவசியம். தொழில்நிறுவன நிதி ஆதரவுத் திட்டம், பங்குபெறும் நிதி அமைப்புகள் சிறிய, நடுத்தர நிறுவனங்களுக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்குவதை ஊக்குவிக்கும். அதோடு, இந்நிறுவனங்கள் சவால்களைக் கடந்து செல்வதற்குப் போதிய உதவி கிடைப்பதையும் உறுதி செய்யும்.**

ஷ்னய்டர் இலக்ட்ரிக் குழுமத்தின் சிங்கப்பூர், மலேசிய, புருணை பிரிவின் தலைவர் கிம் யூன் யங், “அதிகரித்துவரும் எரிசக்தி செலவுகளின் தாக்கத்தைத் தணிப்பதற்கு” எரிசக்தி செயலாற்றல் மானியம் எவ்வாறு உதவி செய்து, நீண்டகாலத்தில் சிறிய, நடுத்தர நிறுவனங்களின் போட்டித்தன்மையை மேம்படுத்தும் என்பது பற்றி குறிப்பிட்டார்:

**“நீடித்த நிலைத்தன்மை திட்டங்களையும், கரியமிலவாயு வெளியாக்கத்தைக் குறைக்கும் முயற்சிகளையும் முடக்குவதற்கான காலம் இதுவல்ல. எனவே, தொழில்கள் பசுமை காக்கும் மாற்றங்களைக் கைவிடாதிருக்க வரவுசெலவுத் திட்டம் 2023 தொடர்ந்து ஆதரவளிப்பது ஊக்கம் தருகிறது.”**

BUDGET 2023

# பொருளியல் போட்டித்தன்மையை வலுப்படுத்துதல்

### இது ஏன் முக்கியம்?

கடுமையாகிவரும் போட்டிக்கு மத்தியில், வட்டார ரீதியிலும் அனைத்துலக ரீதியிலும் சிங்கப்பூர் ஒரு தொழில் மையமாகத் தொடர்ந்து சேவை வழங்கக்கூடிய ஆற்றலை நாம் பாதுகாக்கவேண்டும். உயர் மதிப்புமிக்க செயல்பாடுகளையும் ஆற்றல்களையும் இங்கு தொடங்கவும், நமது உள்ளூர் சுற்றுச்சூழலை மேம்படுத்தவும் அனைத்துலக நிறுவனங்களையும் முதலீட்டாளர்களையும் நாங்கள் தொடர்ந்து வரவேற்கிறோம்.

அதே சமயத்தில், நமது பருவநிலைப் பொறுப்புகளை அடைவதற்கும், கரியமிலவாயு வெளியாக்கம் குறைவானதொரு எதிர்காலத்தில் போட்டித்திறனுடன் நீடிப்பதற்கும், நமது பொருளியலை சிங்கப்பூர் உருமாற்ற வேண்டும்.

## முதலீடுகளை ஊக்குவிப்போம்

அனைத்துலக நிறுவனங்களையும் முதலீட்டாளர்களையும் கவரும் வகையில் நமது ஈர்ப்பாற்றலை மேம்படுத்திட, நாங்கள்:

- தேசிய உற்பத்தித்திறன் நிதியில் $4 பில்லியன் தொகையை நிரப்புவோம். அதோடு, முதலீடு மேம்பாட்டுக்கு ஆதரவளிக்கும் வகையில் நிதியின் வரையறைகளை விரிவுபடுத்துவோம்
- முதலீட்டுச் செலவுத்தொகை, முன்னோடிச் சான்றிதழ் ஊக்குவிப்புத் திட்டம், மேம்பாடு மற்றும் விரிவாக்க ஊக்குவிப்புத் திட்ட வரிச் சலுகைகள் ஆகியவற்றை 2028 டிசம்பர் வரை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டிக்கிறோம்

## தொழில்களின் நீடித்த நிலைத்தன்மை ஆற்றல்களை வலுப்படுத்துவோம்

தொழில்கள் கரியமிலவாயு வெளியாக்கத்தைக் குறைக்கவும், பசுமை காக்கும் வாய்ப்புகளை நாடவும் பின்வரும் திட்டங்களின் வாயிலாக நாங்கள் ஆதரவளிப்போம்:

- நீடித்த நிலைத்தன்மை சார்ந்த திட்டப்பணிகளுக்கு தொழில்நிறுவன மேம்பாட்டு மானியத்தின்கீழ் (EDG) 2026 மார்ச் வரை 70% வரை மேம்பட்ட ஆதரவு
- நீடித்த நிலைத்தன்மையை வளர்க்க சிறிய, நடுத்தர நிறுவனங்கள் மேற்கொள்ளக்கூடிய நடைமுறைச் செயல்பாடுகளையும் முக்கிய கருத்துகளையும் விளக்கமாக எடுத்துச்சொல்ல, தொழில்நிறுவனங்களுக்கான நீடித்த நிலைத்தன்மைத் திட்டத்தின்கீழ் புதிய கருப்பொருள் சார்ந்த, துறைவாரியான பயிற்சிப் புத்தகங்கள்
- சிறிய, நடுத்தர நிறுவனங்கள் எளிதாகத் தகவலும் வளங்களும் பெறுவதற்கு ஒருங்கிணைந்த இணையத்தளம்
- சிறிய, நடுத்தர நிறுவனங்கள் கரியமிலவாயுவை நிர்வகிக்க உதவியாக மின்னிலக்கத் தீர்வுகள், பயிற்சிகள் மற்றும் பங்காளித்துவத் திட்டங்கள். சிறிய நடுத்தர நிறுவனங்கள் முன்திட்டமிட்ட மின்னிலக்கக் கரியமிலவாயு நிர்வாகத் தீர்வுகளை நடைமுறைப்படுத்துவதற்கு உற்பத்தித்திறன் தீர்வுகள் மானியம் வாயிலாக வழங்கப்படும் நிதி ஆதரவும் இதில் உள்ளடங்கும்
- நீடித்த நிலைத்தன்மை அறிக்கையிடலில் சிறிய, நடுத்தர நிறுவனங்களுக்கு ஆதரவளிக்க பயிலரங்குகள் மற்றும் பயிற்சிப்புத்தகம்

## பசுமை காக்கும் வளர்ச்சி வாய்ப்புகளைக் கைப்பற்றுவோம்

நாங்கள் பசுமை காக்கும் புதிய வளர்ச்சித் துறைகளில் பொருளியல் வாய்ப்புகளைத் தொடர்ந்து கைப்பற்றுவோம். அதோடு, தொழில்கள் நீடித்த நிலைத்தன்மையை சாதகமான போட்டித்திறனாகப் பயன்படுத்திக்கொள்ள உதவி செய்வோம். எடுத்துக்காட்டாக, பின்வரும் திட்டத்தின்மூலம்:

- புதுவிதமான நீடித்த நிலைத்தன்மை தீர்வுகளைக் கொண்ட தொழில்கள், கட்டுப்பாட்டு விதிமுறைகளால் தடங்கல்களை எதிர்நோக்கும்போது ஒருங்கிணைந்த தளமாக உதவி புரிகிறது பசுமைப் பொருளியல் கட்டுப்பாட்டு விதிமுறை திட்டம். இதனிடம் சமர்ப்பிக்கப்படும் பரிந்துரைகள் விரைவாக மதிப்பிடப்படும். அதோடு, முறைப்படுத்தப்பட்ட "சேண்ட்பாக்ஸ்" எனும் புதிய தொழில்நுட்பங்களுக்கான பாதுகாப்பான சோதனைக்களத்தில் சோதிக்கப்படவும் கூடும்



KPMG நிர்வாகப் பங்காளி ஓங் பாங் தாய்:

**"சிங்கப்பூரின் தேசிய உற்பத்தித்திறன் நிதிக்காகவும், முதலீடு மேம்பாட்டை உள்ளடக்குவதற்கான அதன் விரிவாக்கத்திற்காகவும் கூடுதலாக ஒதுக்கப்படும் $4 பில்லியன், வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கக்கூடிய தொழில் சூழலை நிலைநாட்டுவதற்கு உதவியாக இருக்கும். இதன்வழி, சிங்கப்பூர் மக்களுக்குப் புதிய வாய்ப்புகள் உருவாகும்."**

## ஊழியர்களுக்குப் பசுமைத் திறன்களைக் கற்றுத்தருவோம்

பசுமைப் பொருளியலின் புதிய அல்லது உருமாறிய வேலைகளைச் செய்வதற்குத் தேவையான திறன்களை ஊழியர்கள் பெறுவதற்கு நாங்கள் உதவி செய்வோம். இதற்காக:

- சிங்கப்பூர் ஸ்கில்ஸ்ஃபியூச்சர் அமைப்புடன் சேர்ந்து பசுமைத் திறன்கள் குழு அமைக்கப்படும். பசுமைப் பொருளியலுக்குத் தேவையான திறன்களையும் பயிற்சித் திட்டங்களையும் இந்தக் குழு உருவாக்கும்
- தொடக்கமாக, எரிசக்தி துறைக்கும், நீடித்த நிலைத்தன்மை அறிக்கையிடல் மற்றும் உறுதியளிப்பு ஆகியவற்றுக்கும் தேவைப்படும் வேலைகளும் திறன்களும் அடையாளம் காணப்படும். இந்த வேலைகளுக்கான பயிற்சிக் கட்டமைப்பும் திட்டங்களும் தயாரிக்கப்படும்

BUDGET 2023

# தொழில்நிறுவனங்களை மேம்படுத்துதல்



### இது ஏன் முக்கியம்?

உலகப் பொருளியல் குறுகியகாலத்தில் மெதுவடைகையில், நாம் எதிரலைகளைத் தொடர்ந்து சந்திப்போம். நாம் செயல்படும் சூழலில் கட்டமைப்பு மாற்றங்களும் நடந்து வருகின்றன. இவை சிங்கப்பூருக்கு வாய்ப்புகள், சவால்கள் இரண்டையும் உருவாக்கும்.

நிறுவனங்களின் உருமாற்றத்திற்கு ஆதரவளிப்பதில் நாங்கள் தொடர்ந்து கடப்பாடு கொண்டிருக்கிறோம். அவை புதிய வாய்ப்புகளைக் கைப்பற்றுவதற்கும், புதிய இயல்புகளுக்கு ஏற்ப மாறுவதற்கும், நீண்டகாலத்தில் தழைத்திருப்பதற்கும் துணைபுரிவது எங்களின் நோக்கம்.

## உருமாற்றத்திற்குத் துணைபுரிவோம்

தொழில்களின் அனைத்துலகமயமாக்க, மின்னிலக்கமயமாக்க, புத்தாக்க முயற்சிகளுக்கு நாங்கள் ஆதரவு வழங்குவோம். இதற்காக:

- மேம்படுத்தப்பட்ட சந்தை ஆயத்தநிலை உதவி மானியத்தின் $100,000 வரம்பு, 2025 மார்ச் வரை மேலும் ஈராண்டுகளுக்கு நீட்டிக்கப்படும்
- தொழில்நிறுவனங்கள் இணைய வர்த்தகத் தளங்களைப் பயன்படுத்த ஆதரவாக, அனைத்துலகமயமாக்கத்திற்கான இரட்டை வரிக் கழிவு (DTDi) மேம்படுத்தப்படும்
- தொழில்நிறுவனப் புத்தாக்கத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இத்திட்டம், ஆய்வு மேம்பாட்டுக்கும் புத்தாக்க நடவடிக்கைகளுக்கும் வரிக் கழிவுகள் வழங்கும்
- புத்தாக்கத் தொழில்முனைப்பு வல்லுநர் திட்டம் மேம்படுத்தப்படும்
- நம்பிக்கையளிக்கும் சிறிய, நடுத்தர நிறுவனங்களில் முதலீடு செய்வதற்காக, சிறிய, நடுத்தரத் தொழில்நிறுவன இணை முதலீட்டு நிதிக்கு $150 மில்லியன் வழங்கப்படும்
- சிங்கப்பூர் அனைத்துலகத் தொழில்நிறுவனத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த திட்டமிட்ட ஆதரவு வழங்கப்படும். புதிய ஸ்கேல்-அப் எக்ஸ் திட்டத்தின்மூலம் வழங்கப்படும் ஆதரவும் இதில் உள்ளடங்கும்

## குடியிருப்பு வட்டாரங்களுக்கு ஆற்றல் அளிப்போம்

நமது குடியிருப்பு வட்டாரங்கள் 2025 திட்டத்தின் ஒரு பகுதியாக, புத்தாக்க, தொழில்முனைப்பு மையத்தை உருவாக்கி, நமது குடியிருப்பு வட்டாரங்களுக்குப் புத்துயிரளிக்க விரும்புகிறோம். இதற்காக நாங்கள்:

- குடியிருப்பு வட்டாரப் புத்தாக்க, உருமாற்றத் திட்டத்தைத் தொடங்கி வைப்போம். ஆர்வமுள்ள தொழில்நிறுவனங்கள் தங்களது தொழில் யோசனைகளைச் சோதித்துப் பார்ப்பதற்கும், ஆற்றலையும் அளவையும் வளர்த்துக் கொள்வதற்கும் சாதகமான சூழலையும் நிர்வகிக்கப்பட்ட பயிற்சி வகுப்புகளையும் இத்திட்டம் வழக்கும்
- குடியிருப்பு வட்டாரக் கடைகளின் மின்னிலக்க, மனிதவள ஆற்றல்களை வளர்ப்பதற்காக, குடியிருப்பு வட்டாரங்களுக்கான மின்னிலக்கமயமாதல் 3.0 திட்டம் அமலாக்கப்படும்





சிறிய, நடுத்தர நிறுவனங்கள் சங்கத்தின் தலைவர் கர்ட் வீ:

**“நமது நிறுவனங்கள் புத்தாக்கத்தில் அதிக கவனம் செலுத்தி, செயல்திறனை மேம்படுத்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும் இவற்றில் முன்னேறிச் செல்ல (தொழில்நிறுவனப் புத்தாக்கத் திட்டம்) அவர்களுக்குத் தெளிவான, கூர்மையான அறிகுறியாகத் திகழ்கிறது.**

**“இந்நிறுவனங்கள் உற்பத்தித்திறனை வளர்த்துக் கொள்வதற்கும், கூர்மையான தொழில்நிறுவனங்களாக உருமாறுவதற்கும், நீண்டகாலத்தில் அதிக போட்டித்தன்மையை அடைவதற்கும் இது துணைபுரியும்.”**

டிலாய்ட் சிங்கப்பூர் அனைத்துலக முதலீடு, புத்தாக்க ஊக்குவிப்புகள் பிரிவின் தலைவர் யிவேன் கான்:

**“(தொழில்நிறுவனப் புத்தாக்கத் திட்டம்), உள்ளூரில் ஆய்வு மேம்பாட்டில் தொடர்ந்து முதலீடு செய்ய தொழில்களுக்கு ஊக்கம் கொடுப்பதற்கும், பன்னாட்டு நிறுவனங்கள் சிங்கப்பூரை ஆய்வு மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கான உத்தேச இடமாகக் கருதுவதற்கும் முக்கிய பங்களிக்கக்கூடும்.”**

BUDGET 2023

# வளத் தட்டுப்பாடுகளுக்குத் தீர்வு கண்டறிதல்



### இது ஏன் முக்கியம்?

இன்றைய தொழில்கள் எதிர்நோக்கும் பற்பல சவால்களும், சிங்கப்பூரின் குறுகிய நிலப்பரப்பாலும் வளங்களாலும் நிரந்தரமானவை. தொழிலாளர், நிலத் தட்டுப்பாடுகள் இதில் உள்ளடங்கும்.

நாம் கரியமிலவாயு கட்டுப்பாட்டையும் எதிர்நோக்குகிறோம். அனைத்துலகப் பருவநிலை செயல்திட்டத்திற்கான தேவை அதிகரித்து வருகையில், நமது பொருளியல், தொழில்துறைகள், தொழில்கள் அனைத்திலும் கரியமிலவாயு வெளியாக்கத்தைக் குறைக்க நாம் முயற்சி எடுக்கவேண்டும். அதே வேளையில், 2050ஆம் ஆண்டுக்குள் கரியமிலவாயுவற்ற நிகரச் சூழலை அடையும் இலக்கை நோக்கிச் செயல்படவேண்டும்.



## எரிசக்தி மாற்றத்தை வழிநடத்துவோம்

நமது எரிசக்தி பாதுகாப்பை நாங்கள் காப்போம். அதோடு, மேலும் நீடித்து நிலைக்கத்தக்க எதிர்காலத்திற்காக கரியமிலவாயுவைக் குறைவாகப் பயன்படுத்தும் எரிசக்தி மூலங்களுக்கு மாறுவதைத் துரிதப்படுத்துவோம். இதற்காக:

- நமது எரிசக்தி விநியோகத்தைப் பன்மயப்படுத்தவும், கரியமிலவாயு பயன்பாட்டைக் குறைக்கவும் புதிய எரிசக்தி விநியோக மூலங்களை மேம்படுத்துவோம். தூய்மையான எரிசக்தி மூலங்களை அடைவதற்காக **வட்டார மின் கட்டமைப்புகளைப்** பயன்படுத்துவோம், **தேசிய ஹைட்ரோஜன் அணுகுமுறையைச்** செயல்படுத்துவோம், **சூரியவொளி சக்தியைப் பயன்படுத்தும் முயற்சிகளைத்** துரிதப்படுத்துவோம்
- நிச்சயமற்ற சூழலிலும் சந்தை தொடர்ந்து நன்கு இயங்குவதை உறுதிப்படுத்த, நமது **எரிசக்தி சந்தை அமைப்புமுறையை** வலுப்படுத்துவோம்
- நமக்குத் தேவையான எரிசக்தி விநியோகத்தையும் எரிசக்தி தொழில்நுட்பத்தையும் பெறுவதற்காக, **வட்டார, அனைத்துலகப் பங்காளிகளுடன் வலுவான கூட்டுறவுகளை வளர்ப்போம்.** அரசாங்கங்களுக்கு இடையிலான திட்டப்பணிகள், அனைத்துலக அமைப்புகளுடனான பங்காளித்துவங்கள் இரண்டுமே இதில் உள்ளடங்கும்

## நமது ஊழியர்களை மேம்படுத்துவோம்

ஊழியர் அணியின் திறன் போட்டித்தன்மையை மேம்படுத்தவும், உற்பத்தித்திறனை வளர்க்க மின்னிலக்கக் கருவிகளைப் பயன்படுத்தவும் தொழில்களுக்கு நாங்கள் ஆதரவளிக்கிறோம். இதற்காக:

- **தொழில்நிறுவன உருமாற்றத் தலைமைத்துவம், எஸ்ஜி தொழில்நுட்பம், சிங்கப்பூர் அனைத்துலக நிர்வாகத் திட்டம், அனைத்துலகத் தயார்நிலைத் திறனாளர் திட்டம்** போன்ற திட்டங்களைத் தொடர்கிறோம்
- **பசுமைத் திறன்கள் குழு** போன்ற முனைப்புகளின் வாயிலாகப் புதிய, உருமாறிய வேலைகளுக்குத் தேவைப்படும் திறன்களை ஊழியர்களுக்குக் கற்றுத்தருகிறோம்
- **உற்பத்தி 2030 வாழ்க்கைத்தொழில் திட்டத்தை** மேம்படுத்தி சிங்கப்பூரர்களை உற்பத்தித் துறைக்கு ஈர்ப்பதற்காக, **தொழில்நுட்பர்கள் மற்றும் உதவிப் பொறியாளர் (உற்பத்தித்துறை) மானியத்தின்** துரிதப்படுத்தப்பட்ட வழிமுறையை மேலும் ஈராண்டுகளுக்கு நீட்டிக்கிறோம்



> ஓசிபிசி நீடித்த நிலைத்தன்மை அலுவலகம், அனைத்துலக மொத்த விற்பனை வங்கிப்பிரிவின் தலைவர் மைக் இங்:
> **“கரியமிலவாயு குறைவாகவுள்ள, நீடித்து நிலைக்கத்தக்க உலகுக்கு மாறிச்செல்வதற்கு ஒட்டுமொத்த பொருளியலையும் பசுமையாக்குவது அவசியம், பசுமைப் பொருளியலை வளர்ப்பது மட்டும் போதாது.”**

> ஷ்னய்டர் இலக்ட்ரிக் குழுமத்தின் சிங்கப்பூர், மலேசிய, புருணை பிரிவின் தலைவர் கிம் யூன் யங்:
> **“பசுமைத் திறனை மேம்படுத்தாமல் சிங்கப்பூரில் பசுமைப் பொருளியலை அடைய முடியாது. குறிப்பாக, விருந்தோம்பல் தொழில்துறையில் இது இன்னமும் துவக்க நிலையில் இருக்கிறது.”**



BUDGET 2023

# பங்காளித்துவங்களை ஆழப்படுத்துதல்



## இது ஏன் முக்கியம்?

சிங்கப்பூர் ஓர் அனைத்துலகத் தொழில் மையமாகத் திகழ்வதற்கு நமது வலுவான வர்த்தகத் தொடர்பும், இருதரப்பு, பலதரப்பு வர்த்தக ஒப்பந்தங்களின் கட்டமைப்பும் அடிப்படைக் காரணங்களாகும்.

உள்நாட்டில், எங்களின் முயற்சிகளைப் பெருக்கவும் அதிகமான தொழில்நிறுவனங்களை எட்டவும், நமது வர்த்தகச் சங்கங்கள் மற்றும் தொழில் சபைகள் போன்ற ஒருமித்த சிந்தனையுள்ள பங்காளிகளுடன் நாங்கள் அணுக்கமாகச் செயல்படுகிறோம்.

## அனைத்துலகத் தொடர்புகளை ஆழப்படுத்துவோம்

நாங்கள் புதிய வர்த்தகப் பங்காளித்துவத்தை வளர்த்துக் கொண்டு, ஏற்கனவே உள்ளவற்றை ஆழப்படுத்தியும், நமது பொருளியல் பரப்பைத் தொடர்ந்து விரிவுபடுத்தி பாதுகாப்போம்:

- அனைத்துலகத் தொழில் மையம் என்ற நமது தகுதியைக் கட்டிக்காக்க, வெளிநாட்டு முதலீடுகள், நிறுவனங்கள், திறனாளர்கள் ஆகியவற்றுக்கு **எப்போதும் திறந்திருப்போம்**
- இந்தோ-பசிபிக் பொருளியல் கட்டமைப்பு, பசிபிக் கூட்டமைப்பு-சிங்கப்பூர் தடையற்ற வர்த்தக உடன்பாடு, மெர்கொசுர்-சிங்கப்பூர் தடையற்ற வர்த்தக உடன்பாடு போன்ற உடன்பாடுகளின் வாயிலாகப் **புதிய பங்காளித்துவங்களை** உண்டாக்குவோம்
- மின்னிலக்கப் பொருளியல் ஒப்பந்தங்கள், பசுமைப் பொருளியல் ஒப்பந்தங்கள் ஆகியவற்றின் வாயிலாகப் பசுமை, மின்னிலக்கப் பொருளியல்களுக்காக **முன்னோடி பங்காளித்துவங்களை** அமைப்போம்

## உள்நாட்டுப் பங்காளித்துவங்களை வலுப்படுத்துவோம்

நாங்கள் வர்த்தகச் சங்கங்கள் மற்றும் தொழில் சபைகளுடன் தொடர்ந்து கூட்டிணைந்து:

- முக்கிய சந்தைகளில் **அனைத்துலகமயமாக்கத்தைப்** புகுத்தி, சிறிய, நடுத்தர நிறுவனங்களுக்கான எஸ்ஜி **தொழில்நுட்ப மின்னிலக்க உருமாற்ற நிலையம்** போன்ற முனைப்புகளின் வாயிலாக சிங்கப்பூர் நிறுவனங்கள் உருமாற்றம் அடைய உதவி செய்வோம்
- **நீடித்த நிலைத்தன்மை கூட்டமைப்பு** போன்ற முனைப்புகளின் வாயிலாக வர்த்தகச் சங்கங்கள் மற்றும் தொழில் சபைகளின் நீடித்த நிலைத்தன்மை ஆற்றல்களை வலுப்படுத்துவோம்

BUDGET 2023

மேல்விவரம் அறிய விரைவுத் தகவல் (QR) குறியீட்டை வருடுங்கள், அல்லது வர்த்தக, தொழில் அமைச்சின் mti_email@mti.gov.sg மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளுங்கள்

## அரசாங்க வர்த்தகப் பரிவர்த்தனைகளுக்கான இணையவாசல்

தொழில்நிறுவனங்களுக்குக் கிடைக்கும் ஆதரவு பற்றி மேல்விவரம் அறிய அரசாங்க வர்த்தகப் பரிவர்த்தனைகளுக்கான இணையவாசலை நாடுங்கள். மானியங்களுக்கு விண்ணப்பம் செய்யுங்கள் அல்லது மின்-ஆலோசகரைப் பயன்படுத்தி எளிமையான சில கேள்விகளுக்குப் பதிலளித்து, அரசாங்கத் திட்டங்களுக்கு நீங்கள் தகுதி பெறுகிறீர்களா என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

## தலைமைத் தொழில்நுட்ப அதிகாரி சேவை

உங்கள் நிறுவனத்தின் மின்னிலக்கத் தயார்நிலையைச் சொந்தமாக மதிப்பிடவும், மின்னிலக்கமயமாக்கத்தில் உள்ள குறைபாடுகளை அடையாளம் காணவும், உங்கள் தொழிலின் தேவைகளுக்கு ஏற்ப மின்னிலக்கத் தீர்வுகளைக் கண்டறியவும் எளிமையான சில கேள்விகளுக்குப் பதில் அளித்திடுங்கள். தகுதிபெறும் நிறுவனங்கள், பகிர்வுச் சேவை வழங்கும் மின்னிலக்க ஆலோசகர்களிடமிருந்து மின்னிலக்க ஆலோசனை சேவைகளும் பணித்திட்ட நிர்வாக ஆதரவும் பெறலாம்.

## சிறிய, நடுத்தர நிறுவன நிலையங்கள்

எங்களது அனுபவமிக்கத் தொழில் ஆலோசகர்கள், வெளிநாட்டில் தொழில் விரிவாக்கம், நிதியளிப்பு, உற்பத்தித்திறன், மனிதவளம் போன்ற பிரிவுகளில் உதவி வழங்குவதன்வழி உங்கள் தொழிலின் வளர்ச்சிக்கு ஆதரவளிப்பார்கள். உங்களுக்கு விருப்பமான சிறிய, நடுத்தர நிறுவன நிலையத்தில் இலவசமாகத் தனிப்பட்ட ஆலோசனை பெற பதிவு செய்யுங்கள்.

## புத்தாக்க நிலையங்கள்

சிறிய, நடுத்தர நிறுவனங்களின் தொழில்நுட்பப் புத்தாக்கத் திறனை மேம்படுத்துவதற்காக, உயர்கல்விக் கழகங்கள், ஆய்வுக் கழகங்கள் ஆகியவற்றுடன் கூட்டிணைந்து புத்தாக்க நிலையங்கள் அமைக்கப்பட்டன. சிறிய, நடுத்தர நிறுவனங்கள் குறிப்பிட்ட துறைகளில் தொழில்நுட்பத் திட்டப்பணிகளை உருவாக்கவும் சோதித்துப் பார்க்கவும் தேவைப்படும் வசதிகள், ஆலோசனை, பயிற்சி, தொழில்நுட்பச் சேவைகள் ஆகியவற்றை இந்நிலையங்கள் வழங்குகின்றன.

MTI MINISTRY OF TRADE AND INDUSTRY SINGAPORE